**<u>STARTING TIME 10.42 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 172/2019</u>**

Deposition of **<u>P.W.3</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 18.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மணி    Father's Name : போடி நாயுடு

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி வட்டம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 71

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கை யார் தாக்கல் செய்துள்ளது என்று தெரியுமா என்றால், எஸ். வெங்கடேசன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். வெங்கடேசன் தாக்கல் செய்த வழக்கிற்காக வேண்டி தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால், ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், சீனிவாசலு நாயுடு பெயரில் நாங்கள் எழுதி வைத்த கூட்டுக்குடும்ப சொத்தை வெங்கடேசன் அபகரித்து விட்டார், அதனால் அந்த சொத்திற்காக வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எந்த வகையில் அவர்கள் உறவினர்கள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

மேற்படி சீனிவாசலு நாயுடு எனது உடன்பிறந்த சகோதரரா என்றால், ஆமாம். என் தகப்பனார் போடி நாயுடுவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால், 4 மகன்கள் மற்றும் 3 மகள்கள் ஆகும்.

3. எனது தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் மற்றும் கிரயம் பெற்ற வகையில் 69 செண்ட் சொத்து சொந்தம் என்றால், சரிதான். மேற்படி ஏக்கர் 2.69 செண்ட் நிலத்தில் வந்த வருமானத்தை கொண்டு தான் எனது தகப்பனார் எனது தாயாரையும், 4 மகன்கள் மற்றும் 3 மகள்களையும், அவரையும் பராமரித்து வந்தார் என்றால், சரிதான்.

4. எனது தகப்பனார் உயிருடன் இருந்த வரையில் குடும்ப நிர்வாகம் அனைத்தையும், கூட்டுக்குடும்ப கர்த்தாவாக இருந்து அவர் தான் பார்த்து வந்தார் என்றால், சரிதான், நாங்கள் சம்பாதிக்கும் பணத்தையும் அவரிடம் தான் கொடுத்து வந்தோம். எங்களுக்கு விவசாயம் தவிர வேறு தொழில் இல்லை என்றால், விவசாயமும் செய்து வந்தோம், நான் ரேசன் கடையில் அரசு வேலையில் இருந்தேன்.

5. எனது பிரமாண வாக்குமூலத்தில் என் தகப்பனார் மட்டும் விவசாயம் செய்து வந்ததாகவும், நான் ரேசன் கடையில் வேலை செய்து வந்ததாகவும், எனது சகோதரர்கள் வெவ்வேறு வேலை செய்து வந்ததாகவும் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால், சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் நானும், எனது சகோதரர்களும் எந்த வருடம் வரை கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தோம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

6. எனது சகோதரர் கோவிந்தராஜ் எந்த வருடம் காலமானார் என்றால், 1977-ம் ஆண்டு காலமானார். எனது வாக்குமூலத்தில் மேற்படி வருடத்தை குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால், சரிதான். எனது தகப்பனார் கடந்த 17.12.1988 அன்று காலமானார் என்றால், சரிதான். எனது தகப்பனார் காலமான பின்பு தான் என் தாயார் காலமானார் என்றால், சரிதான்.

7. எனது சகோதரர் கோவிந்தராஜ் நாயுடு காலமான பிறகு எனது தகப்பனார், எனது தாயார், நான் மற்றும் எனது மற்ற சகோதரர்கள் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம். அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தோமா அல்லது தனித்தனி வீட்டில் வசித்து வந்தோமா என்றால், ஒரே வீட்டில் தான் வசித்து வந்தோம். அதுபோல் நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக ஒரே குடும்பமாக வசித்து வந்ததற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

எனது தகப்பனார் உயிருடன் இருந்த போதே எனது உடன்பிறந்த சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால், சரிதான்.

8. எனது சகோதரர் சீனிவாசலு நாயுடு முதன்முதலில் யாரிடமிருந்து சொத்தை கிரையம் வாங்கினார் என்றால், திருநாவுக்கரசு முதலியார் என்பவரிடமிருந்து வாங்கினார். எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரண சொத்தை கிரையம் வாங்கினார் என்றால், சர்வே எண் 245/1A–ல் 50 செண்ட் வாங்கினார். அந்த சொத்து தான் அவர் முதன்முதலாக வாங்கிய சொத்தா என்றால், அதை அவர் வாங்கவில்லை, நாங்கள் தான் அவர் பெயரில் வாங்கினோம். எந்த தேதியில் அந்த சொத்தை கிரையம் வாங்கியது என்றால், 1984–ம் ஆண்டு வாங்கினோம், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகைக்கு அந்த சொத்தை கிரையம் வாங்கப்பட்டது என்றால், அது பற்றி தற்போது நினைவில் இல்லை.

9. சீனிவாசலு நாயுடு பெயரில் கிரையம் வாங்கிய சொத்திற்கான பணத்தை யார், யார் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால், பக்தவச்சலு நாயுடு, மணி நாயுடு ஆகிய நான், சீனிவாசலு நாயுடு அவரது பணத்தையும், எனது அம்மா அவரிடமிருந்த பணத்தையும் கொடுத்து கிரையம் வாங்கினோம். 4 பேரும் எவ்வளவு பணம் கொடுத்தோம் என்றால், அது பற்றி தற்போது நினைவில் இல்லை.

10. கிரையம் பெற்ற அன்று நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால், இல்லை. கிரையம் பெறுவதற்கான பணத்தை நான், எனது அம்மா,

எனது அண்ணன் பக்தவச்சலு நாயுடு மற்றும் சீனிவாசலு நாயுடு யாரிடம் கொடுத்தோம் என்றால், நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து சீனிவாசலு நாயுடுவிடம் கொடுத்தோம். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து சீனிவாசலு நாயுடுவிடம் பணத்தை கொடுத்து கிரையம் பெற்றதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

11. எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியும். வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் நாங்கள் 3 பேரும் சேர்ந்து சீனிவாசலு நாயுடுவிடம் கொடுத்த பணத்தை கொண்டு சொத்தை கிரையம் பெறுவதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால், கண்ணாடி இல்லாததால் அதில் உள்ளதை படிக்க முடியவில்லை. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்திற்கான பணத்தை சீனிவாசலு நாயுடு தான் கொடுத்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றும், நாங்கள் மூவரும் சேர்ந்து கொடுத்த பணத்தை கொண்டு சீனிவாசலு நாயுடு பெயரில் கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

12. சீனிவாசலு நாயுடு கூட்டுக்குடும்பத்தை விட்டு தனியாக சென்ற பிறகு நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து வந்த வருமானத்தைக் கொண்டு தான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால், அது பொய்யாகும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை கிரையம் பெறுவதற்கான பணத்தை நானும், எனது தாயார் மற்றும் சகோதரர் பக்தவச்சலம் ஆகிய மூவரும் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

13. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை கூட்டுக்குடும்ப வருமானத்தைக் கொண்டு வாங்கிய சொத்து என சொல்வதால், அந்த சொத்தை கூட்டுக்குடும்பத்தை சேர்ந்த அனைவரும் அனுபவித்து வந்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை, ஆவணம் எதுவும் இல்லை என்பதால் தான் அந்த சொத்து முழுவதுமே தங்களுக்கு சொந்தம் என

சீனிவாசலு நாயுடுவின் வாரிசுகள் சொல்கிறார்கள்.

14. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை தவிர வேறு சில சொத்தையும் சீனிவாசலு நாயுடு கிரையம் பெற்றுள்ளாரா என்றால், வேறு சொத்து எதையும் சீனிவாசலு நாயுடு கிரையம் வாங்கவில்லை. சர்வே எண் 245/1A–வில் கண்டுள்ள சொத்து மட்டும் தான் கூட்டுக்குடும்ப சொத்து என சொல்கிறேனா என்றால், கூட்டுக்குடும்ப பணத்தில் இருந்து வீடு ஒன்றையும் அவர் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. அந்த வீட்டை எந்த வருடம் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்றால், அது பற்றி நினைவில் இல்லை. அதுபோல் கூட்டுக்குடும்ப பணத்தைக் கொண்டு வீடு ஒன்றையும் சீனிவாசலு நாயுடுவின் பெயரில் கிரையம் பெற்றதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

15. எனது தகப்பனாருக்கு சொந்தமான பூர்வீக சொத்தையும், எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தையும் இதுநாள்வரை ஒன்றாக அனுபவித்து வருகிறோமா அல்லது பாகம் பிரித்துக் கொண்டோமா என்றால், 1990–ம் ஆண்டு வரை ஒன்றாக தான் அனுபவித்து வந்தோம், 1990–ம் ஆண்டில் குடும்ப பெரியவர்கள் 4 பேரை கொண்டு பாகம் பிரிக்க பேச்சு வார்த்தை நடத்தினோம், அப்போது எனது அண்ணன் சீனிவாசலு நாயுடுவின் மகன் வெங்கடேசன் பஞ்சாயத்தார் பேசிய பாகப்பிரிவினைக்கு ஒப்புக்கொள்ளவில்லை, பிறகு வெங்கடேசனே வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

16. 1990–ம் ஆண்டு நடந்த பேச்சுவார்த்தையின் போது தனது தகப்பனார் சம்பாதித்து வாங்கிய சொத்தை பாகம் பிரிக்க முடியாது என வெங்கடேசன் சொன்னதால் பாகப் பிரிவினை முடிவு பெறவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.2–ன் மூலம் சீனிவாசலு நாயுடுவின் பெயரில் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து இதுநாள்வரை எந்த பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என்றால், சரிதான், ஆனால் அதில் எங்களுக்கும் உரிமை உள்ளது.

17. எனது அண்ணன் சீனிவாசலு நாயுடு காலமான பிறகு, வா.சா.ஆ.2–ன் மூலம்

கிரையம் பெற்ற சொத்திற்கு எனது அண்ணன் வாரிசுகள் பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

18. இவ்வழக்கின் வாதிகள் வழக்குரையில் சொல்லியுள்ள விவரத்தை தான் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். தாவா சொத்தை கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து சீனிவாசலு நாயுடு பெயரில் கிரையம் பெற்றதாக சொல்வது பொய் என்றும், அந்த சொத்தை சீனிவாசலு நாயுடு அவரது சொந்த பணத்தைக் கொண்டு கிரையம் பெற்ற சொத்து என்றால், சரியல்ல. வாதி வாணி சொல்லியுள்ள விவரங்களை தான் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும், அவைகள் உண்மைக்கு புறம்பானவைகள் என்றால், சரியல்ல, அந்த சொத்தை அனைவரும் கூட்டாக சேர்ந்து கிரையம் பெற்ற சொத்தாகும், வாதி வாணிக்கு வீடு இல்லை என்பதால் அந்த சொத்தில் வீடு கட்டிக் கொண்டு 10 வருடங்களாக அனுபவித்து வருகிறார், மற்ற இருவரான நானும், எனது அண்ணன் பக்தவச்சலு நாயுடுவின் வாரிசுகள் வழக்கின் முடிவுக்காக வேண்டி காத்திருக்கின்றோம்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**நீதிமன்ற அனுமதியுடன் வாதிகள் தரப்பில் மறு விசாரணை**

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் படித்துப் பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதில் பொய்யான சங்கதிகள் எதுவும் இல்லை, உண்மையை தான் சொல்லியுள்ளேன்.

மறு குறுக்கு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.43.A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.11.18 14:51:28 +0530